10.07.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகள் பண்ணைக் குட்டைகள் அமைக்க ஆலோசனை**

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் தங்களின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைப்பதால் மழை நீர் சேகரிக்கப்பட்டு, வறட்சிக் காலங்களில் பயிருக்கு பயன்படுத்தி பயன்பெறலாம் என, வேளாண்மைத் துறை துணை இயக்குநர் எஸ்.எம். உதுமான் முகைதீன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறியிருப்பதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் 15 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இதில், பெருவாரியான நிலங்கள் மானாவாரியாகவே உள்ளன. மழைப் பொழிவு சீராக இல்லாத காலங்களில், அந்நிலங்களில் பயிரிடப்படும் பயிர்கள் நீரின்றி பாதிக்கப்படுவதால் மகசூல் இழப்பு ஏற்பட்டு, விவசாயிகள் நஷ்டமடைகின்றனர்.

இதைக் கருத்தில்கொண்டு, மாவட்ட நிர்வாகம் 5 ஆயிரம் பண்ணைக் குட்டைகளை விவசாய நிலங்களில் அமைக்க ஏற்பாடு செய்வதுடன், முதற்கட்டமாக 1,500 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட உள்ளன. இதன்மூலம், மழைக் காலங்களில் நீர் சேகரிக்கப்பட்டு, வறட்சிக் காலங்களில் பயிர்களுக்கு பயன்படுத்தலாம். மழை சீராக பெய்யாவிட்டாலும், நல்ல மகசூல் பெறமுடியும். குட்டைகளில் நீர் தேக்குவதன் மூலம், நிலத்தடி நீர்மட்டமும் உயரும். இதன்மூலம்,

ஆண்டுக்கு 2 முறை பயிர் சாகுபடி செய்யலாம். அதேநேரம், குட்டைகளின் வரப்புகளில் காய்கறிகள் மற்றும் கீரைகளை பயிரிடலாம். மேலும், குட்டைகளில் மீன் வளர்க்கலாம். இதனால், கூடுதல் வருமானம் கிடைப்பதுடன், குடும்பத்துக்கு தேவையான சத்தான உணவுப் பொருள்களும் கிடைக்கும்.

பண்ணைக் குட்டைகள் வெட்டப்படும்போது எடுக்கப்படும் மண், வளமற்ற நிலங்களை வளமாக்கவும், பள்ளமான நிலங்களை மேடாக்கவும், பண்ணைகளில் சாலைகள் அமைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, பண்ணைக் குட்டைகளை அமைத்து பயனடையுமாறு அதில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

காரமடை வட்டார விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில் மானியத்துடன் கூடிய சொட்டுநீர் பாசன வசதி அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தோட்டக்கலை உதவி இயக்குநர் பிரேமலதா வெளியிட்ட அறிக்கை:

தோட்டக்கலைத் துறையின் கீழ் 2015-16-ஆம் நிதியாண்டில் மானியத்துடன் கூடிய சொட்டுநீர் பாசனம் அமைக்க காரமடை வட்டார விவசாயிகள் விண்ணப்பிக்கலாம். குறைந்த நீரில் அதிக பரப்பில் விவசாயம் செய்வதற்கு சொட்டுநீர் பாசனம் வரப்பிரசாதமாக இருந்து வருகிறது. காரமடை வட்டாரத்தில் சொட்டுநீர் பாசனம் மூலமாக 50 சதவீதத்திற்கும் மேலான விவசாயிகள் வாழை, கருவேப்பிலை, காய்கறி மற்றும் பூச்செடிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். குறைந்த நீரில் அதிக மகசூல் எடுக்க முடிகிறது. எனவே, இதை ஊக்குவிக்கும் வகையில் சொட்டுநீர் பாசனம் அமைக்க அரசு பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறது.

இந்தாண்டு காரமடை வட்டாரத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 78.0 ஹெக்டேர், பெரிய விவசாயிகளுக்கு 21.0 ஹெக்டேர் என மொத்தம் 99.0 ஹெக்டேருக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு முன்னுரிமையும், பெண்களுக்கு சிறப்பு ஒதுக்கீடும் உண்டு. தேவைப்படும் விவசாயிகள் காரமடை வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலகத்தை அணுகி, தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

**வேளாண் பல்கலை: தொழில் பிரிவு கலந்தாய்வில் 38 இடங்கள் நிரம்பின**

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பிரிவுக்கான முதல் கட்ட கலந்தாய்வு நிறைவடைந்துள்ள நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற தொழில் பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வில் 38 இடங்கள் நிரம்பியுள்ளன.

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உறுப்பு, இணைப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு கோவையில் ஜூன் 27-ஆம் தேதி தொடங்கியது. ஜூன் 29-ஆம் தேதி முதல் ஜூலை 7-ஆம் தேதி வரை நடைபெற்ற பொது கலந்தாய்வில் 1,323 இடங்கள் நிரம்பியுள்ளன.

இதைத் தொடர்ந்து மீதமுள்ள 138 இடங்களுக்கு ஜூலை 18-ஆம் தேதி இரண்டாம் கட்ட கலந்தாய்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தொழில் படிப்பு மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 40 இடங்களை நிரப்புவதற்கான கலந்தாய்வு வியாழக்கிழமை (ஜூலை 9) நடைபெற்றது. இதற்காக, 49 மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்த நிலையில், 38 மாணவர்கள் மட்டுமே பங்கேற்றனர்.

இதில், அவர்கள் அனைவரும் மாநிலம் முழுவதிலும் உள்ள பல்வேறு வேளாண் கல்லூரிகளில் தங்களுக்கான பாடப் பிரிவுகளைத் தேர்வு செய்தனர். தேர்வானவர்களில் 25 பேர் ஆண்கள், 13 பேர் பெண்கள்.

**தென்னை ஆராய்ச்சி மையத்தில் நவீன ரக தென்னங்கன்றுகள் விற்பனை**

உடுமலை அருகே திருமூர்த்தி நகரில் உள்ள மத்திய தென்னை ஆராய்ச்சி மையத்தில் நவீன ரக தென்னங்கன்றுகள் விற்பனை வியாழக்கிழமை துவக்கி வைக்கப்பட்டது. இந்த தென்னை ஆராய்ச்சி மையம், குட்டை, நெட்டை, கலப்பின தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யவும், நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் செயல்விளக்கப் பண்ணையாகவும் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், சௌகாட் ஆரஞ்ச் குட்டை, மலேயன் மஞ்சள் குட்டை, மலேயன் ஆரஞ் ச் குட்டை என பல்வேறு ரகங்களில் 4 ஆயிரம் தென்னங்கன்றுகள் விற்பனைக்கு இங்கு வந்துள்ளது. இதைத் தொடர்ந்து இந்த தென்னங்கன்றுகள் விற்பனை வியாழக்கிழமை தொடங்கியது. மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உடுமலை ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.ராஜலட்சுமி, துணைத் தலைவர் ஆர்ஜி.ஜெகநாதன், அதிமுக ஒன்றியச் செயலாளர் கே.ஆறுச்சாமி, தளி பேரூராட்சி தலைவர் தெய்வநாயகி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் நேரடி விற்பனைக்கு திட்டமிட வேண்டும்**

விளை பொருள்களுக்குத் தகுந்த விலை கிடைக்க,விவசாயிகள் நேரடி விற்பனைக்குத் திட்டமிட வேண்டுமென வேளாண் அதிகாரி வலியுறுத்தினார்.

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில், விவசாயிகளுடனான சந்திப்புக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதற்கு தலைமை வகித்த கோவை மண்டல வேளாண் உதவி இயக்குநர் சாத்தப்பன் பேசியதாவது: விளை பொருள்களுக்குத் தகுந்த விலை கிடைப்பதில்லையென விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். ஒரே நேரத்தில் தேவைக்கு அதிகமான பொருள் சந்தைக்கு வரும் போது விலை குறைந்து விடுகிறது. இதனைத் தவிர்க்க அரசின் கிடங்குகளில் இருப்பு வைத்து, பின்னர் விற்பனை செய்யலாம். வேளாண் துறையினருடன் தொடர்பில் இருந்து விலை விவரம், என்ன பயிரிடலாம், மண் பரிசோதனை போன்றவை குறித்த சமீபத்திய தகவல்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நேரடி விற்பனையில் தனி நபர் தவிர்த்து, குழுக்களாகச் சேர்ந்தால் தான் நம்பிக்கையைப் பெற முடியும். எனவே உழவர் சந்தை போன்ற இரு தரப்பினருக்கும் பயனுடைய நேரடி விற்பனைக்கு விவசாயிகள் திட்டமிட வேண்டும் என்றார். வெள்ளக்கோவில் வேளாண் உதவி இயக்குநர் ஆர்.சீனிராஜ், உதவி வேளாண் அலுவலர்கள் மகாலிங்கம், சிவக்குமார், விற்பனைக் கூட மேற்பார்வையாளர் வனிதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்**

மடத்துக்குளம் வட்டம், சாளரப்பட்டி கிராமத்தில் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சார்பில் நடைபெற்ற இம்முகாமில், வேளாண் அலுவலர் திருமகள் ஜோதி தலைமை வகித்து பேசியது:

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளை பொருள்களான மக்காச்சோளம், கொ ண்டைக் கடலை மற்றும் தேங்காய் ஆகியவற்றை நன்றாக காய வைத்து பதப்படுத்தி த ரம் பிரித்து நவீன முறைப்படி

சேமித்து மதிப்பூட்டப்பட்ட பொருள்களாக மாற்றி விற்ப னை செய்தால் நல்ல விலை கிடைக்கும் என்றார்.மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் (பொ) ப.சண்மு கசுந்தரம், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**நீலகிரியில் 100 ஆண்டுகளுக்குப் பின்னர் புதுப்பிக்கப்படும் பழப் பண்ணைகள்**

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 100 ஆண்டுகளுக்குப் பின்னர், அரசு பழப் பண்ணைகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இதனால் அழியும் நிலையிலுள்ள பழ வகைகளை பாதுகாக்கும் முயற்சியில் தோட்டக்கலைத் துறை ஈடுபட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஆங்கிலேயர் வருகைக்கு பின்னர் சோதனை முயற்சியாக இங்கிலாந்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஆங்கிலேய காய்கறிகள் உதகையில் பயிரிடப்பட்டதைப் போலவே குன்னூர், பர்லியாறு, கல்லாறு பகுதிகளிலும் பல்வேறு பழ வகைகள் பயிரிடப்பட்டன.

குறிப்பாக ஆப்பிள், பீச், பிளம், வால்பேரி ஆகியவற்றோடு துரியன், மங்குஸ்தான், ரம்பூட்டான், லிச்சி போன்ற பழ வகைகளும் பயிரிடப்பட்டன. அதைத் தொடர்ந்து, ஆங்கிலேயர்களின் குடியிருப்புகளில், மாவட்டம் முழுவதும் இப்பழ வகைகளின் கன்றுகள் நடவு செய்யப்பட்டன. அப்போது அவர்கள் நட்ட மரங்கள்தான் இன்றளவும் பலன் தந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில், காலப் போக்கில் இம்மரங்கள் போதிய அளவில் பராமரிப்பில்லாத தாலும், வயதானதாலும் பலன் தருவது குறைந்ததுடன், அழிவையும் சந்திக்க நேர்ந்தது. குறிப்பாக ஊட்டி ஆப்பிள் என்ற ரகமேயில்லாமல் போய்விட்டது. அதேபோல, வால்பேரி என அழைக்கப்படும் பேரிக்காய் ரகமும் மிகக்குறைவாகவே உள்ளது. வெல்வெட் ஆப்பிள், முட்டைப்பழம்

போன்றவற்றை காண்பதே அரிதாகிவிட்டது. அதேபோல பர்லியாறு பழப் பண்ணையிலுள்ள துரியன் பழத்திற்கு மிக அதிக வரவேற்புள்ளது. ஆனால், மிகக்குறைந்த அளவே பழம் கிடைப்பதால் இதற்காக முன்பதிவு செய்து, மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில், குன்னூர் அரசு பழத்தோட்டம், பர்லியாறு பழப் பண்ணை ஆகியவற்றுடன், கோவை மாவட்டத்தில், மேட்டுப்பாளையத்தில் உள்ள கல்லாறு பழப் பண்ணை ஆகிய 3 பழப் பண்ணைகளையும் மேம்படுத்தவும், அவற்றிற்கு புத்துயிர் ஊட்டும் வகைகளில் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய அதே வகையிலான பழமரங்களின் பழக் கன்றுகளை நடவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 30 லட்சம் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், மலேஷியாவிலிருந்து துரியன் மரக்கன்றுகளும், காஷ்மீரிலிருந்து ஆப்பிள் மரக்கன்றுகளும், பஞ்சாப்பிலிருந்து ரம்பூட்டான் பழ நாற்றுகளும் நீலகிரிக்கு வரவழைக்கப்பட்டுள்ளன.

இவற்றோடு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து லிச்சி, சாத்துக்குடி, நார்த்தங்காய், ஆரஞ்சு, பெர்சிமன், பிளம், பீச், பேரி, இனிப்பு எலுமிச்சை உள்ளிட்ட பழமரங்களின் கன்றுகளும் வரவழைக்கப்பட்டுள்ளன.

இவற்றை நடவு செய்யும் பணியும் தற்போது தொடங்கியுள்ளது. இதுதொடர்பாக தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் டாக்டர் ராம்சுந்தர் கூறுகையில், "நீலகிரி மாவட்டத்தில் ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்திய மலைக் காய்கறிகள், பழ வகைகள், பூக்கள் போன்றவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வரும் நிலையில், அழியும் நிலையிலுள்ள பழ வகைகளைப் பாதுகாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது நடவு செய்யப்படும் பழ மரக்கன்றுகளின் மூலமாக அடுத்த 3 ஆண்டுகளில் பலன் கிடைக்க வாய்ப்புள்ளது. தொடர்ந்து, அடுத்து வரும் 5 ஆண்டுகளில் அனைத்து ரகப் பழ வகைகளும் நீலகிரியிலேயே கிடைக்கும். அத்துடன், அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கன்றுகளைக் கொண்டு இம்மாவட்டத்தில் மட்டுமின்றி தமிழகத்தின் எப்பகுதியில் வேண்டுமானாலும் அச்சூழலில் வளரக்கூடிய பழ மரங்களை வளர்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது'என்றார்.

எனவே, தற்போது ஊட்டி ஆப்பிள் என பெயரளவுக்கு அழைக்கப்பட்டாலும், ஆப்பிள் ரகம் ஏதும் உதகையில் விளையாத நிலையில், விரைவில் இந்நிலை மாறி எந்த ரகப் பழமானாலும் நீலகிரியில் கிடைக்கும் என்ற நிலை விரைவில் உருவாகுமென தோட்டக்கலைத் துறையினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

**"சொட்டுநீர்ப் பாசன முறையைப் பின்பற்றுங்கள்'**

தோட்டக் கலை பயிரிடுதலில் சொட்டுநீர்ப் பாசன முறையைப் பின்பற்ற வேண்டும் என்று விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் கேட்டுக் கொண்டார். தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறை சார்பில், விவசாயிகளுக்கான இரு நாள் கருத்தரங்கம் வேலூரில் வியாழக்கிழமை தொடங்கியது. இதில், அவர் பேசியது: வேலூர் மாவட்டத்தில் 32 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மா மரங்கள் 14 ஆயிரத்து 800 ஹெக்டர் பரப்பில் வளர்கின்றன.

வாழை, சப்போட்டா, கொய்யா உள்ளிட்ட பழப் பயிர்கள், காய்கறிகள், மலர் சாகுபடியும் பரவலாக நடைபெறுகின்றன.

தேசிய நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற சிறந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, நுண்ணீர் பாசன முறையில் தோட்டக்கலை பயிர்களை செய்வதால், விவசாயிகள் அதிக மகசூலைப் பெற முடியும். இந்தத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத

மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க தேவையான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானிய விலையில் உபகரணங்கள் அளிக்கப்படுகின்றன.

தண்ணீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு விவசாயிகள் சொட்டுநீர்ப் பாசன முறையைப் பின்பற்றத் தொடங்க வேண்டும். மேலும், பண்ணைக் குட்டைகளை அமைத்து மழைநீரைச் சேகரிக்க வேண்டும் என்றார் நந்தகோபால். தோட்டக்கலைத் துறையின் துணை இயக்குநர் சி.ச.பொன்னு, வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர் ர.ஜெயசுந்தர், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் எம்.பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தண்ணீர் இல்லாத விவசாய கிணறுக்கு வறட்சி நிவாரணம் வழங்கக் கோரிக்கை

வறண்ட விவசாய கிணறுகளைக் கணக்கெடுத்து விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். நாமக்கல் மாவட்டம், சின்னமநாயக்கன்பட்டியைச் சேர்ந்த விவசாய சங்க பிரதிநிதி மணியன், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தியிடம் வியாழக்கிழமை அளித்த மனு விவரம்: நாமக்கல் மாவட்டத்தில், காவிரி ஆறு பாயும் நிலங்களை தவிர, பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாய கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு எவ்வித விவசாயமும் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

மாவட்டம் முழுவதும் உள்ள விவசாய கிணறுகளைக் கணக்கெடுத்து, தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். மீனவர்களுக்கு மீன்பிடி தடைக் காலங்களில், உதவித் தொகை வழங்குவதைப் போல, விவசாயிகளுக்கும் மழை இல்லாமல் விவசாயம் செய்ய முடியாதவர்களையும், அந்தந்தப்

பகுதி கிராம நிர்வாக அலுவலர் மூலம் கணக்கெடுத்து மாதம்தோறும் ரூ.4,000 உதவித் தொகை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீவன உற்பத்திக்கு மானியம்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

தீவன உற்பத்திக்கு அரசு மானியம் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு: பால் உற்பத்தியைப் பெருக்கவும் உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையிலும் மானியத்துடன் கூடிய தீவன உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், நீர்பாசன வசதி கொண்ட விவசாயிகளுக்கு தீவனச் சோளம், வேலிமசால் விதைகள் இலவசமாகவும், ரசாயன உரம் வாங்குவதற்கானச் செலவுத் தொகை ரூ.410-ம் வழங்கப்படும். இந்தத் தீவனப் பயிர் உற்பத்தி செய்ய நாமக்கல் மாவட்டத்தில் 500 ஏக்கர் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாசன வசதி இல்லாத விவசாயிகளுக்கு மானவாரி தீவன உற்பத்திக்காக ஏக்கருக்கு 3 கிலோ சோளம், ஒரு கிலோ தட்டைப் பயிறு இலவசமாக வழங்கப்படும். நிகழாண்டு 2,500 ஏக்கரில் மானவாரி தீவனம் சாகுபடி செய்யப்பட உள்ளது. இதேபோல, 180 பேருக்கு மழைத்தூவான் கருவி 75 சத மானியத்தில் வழங்கப்படுகிறது. குறைந்த விலையில் நிறைந்த புரதம் கொண்ட அசோலா பாசி உற்பத்தி செய்ய 400 பேருக்கு அசோலா தொட்டி, இடுப்பொருள்கள் இலவசமாக வழங்கப்படும்.

பசுந்தீவனம், கரும்புத் தோகையைப் பதப்படுத்தி தீவனப் பற்றாக்குறை உள்ள காலத்தில் பயன்படுத்தும் நோக்கத்தில் ஊறுகாய் புல் தயாரிக்க 700 பேருக்கு இலவசமாக தலா நான்கு சைலேஜ் பைகள் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தில் குறைந்தது இரண்டு கறவை மாடுகள் உள்ள சிறு, குறு விவசாயிகள், விலையில்லா கறவை பசு திட்டப் பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இந்தத் திட்டத்தில் தாழ்த்தப்பட்ட,

பழங்குடியினருக்கு 30 சத ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருவர் ஒரு திட்டத்தில் மட்டுமே பயன்பெற முடியும். ஏற்கெனவே கடந்த ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர்கள் மீண்டும் பயன்பெற இயலாது.

இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் அருகே உள்ள கால்நடை மருந்தகத்தில் விண்ணப்பம் அளித்து பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயந்திரம் மூலம் நெல் நாற்று நடவுப் பணி**

இயந்திரம் மூலம் நெல் நாற்று நடவுப் பணியை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ், புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், குண்டலப்பட்டி கிராமத்தில், வேளாண் துறை சார்பில் இயந்திரம் மூலம் நெல் நாற்று நடவு செய்யும் பணியை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தொடங்கி வைத்து செய்தியாளர்களிடம் கூறியது: கிருஷ்ணகிரி மாவட்டம் அடிப்படையிலேயே தோட்டக்கலைப் பயிர்கள் அதிகம் சாகுபடி செய்யப்படும் மாவட்டமாக இருந்தாலும், நெற்பயிர் சுமார் 23 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வளர்ந்து வரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு, உணவு தானியப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது.

தற்போது விவசாயத்துக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டு வரும் நிலையில், இயந்திரம் மூலம் நடவு செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, ஹெக்டேருக்கு ரூ. 3 ஆயிரம் மானியம் வழங்கப்படும். மாவட்டத்தில், 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் இயந்திரம் மூலம் நெல் நாற்று நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு, ரூ.60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல் நடவு இயந்திரங்கள்

மானிய விலையில் வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் மூலம் சாகுபடி செய்ய செலவு குறைவதுடன், வேலை ஆள்கள் பற்றாக்குறையினை போக்கி சரியான இடைவெளி, வரிசை நடவு, கூடுதல் மகசூல் போன்ற நன்மைகள் கிடைக்கின்றன. நெல் நடவு இயந்திரத்தின் முழு விலை ரூ.2.50 லட்சம் ஆகும். பெண்கள், ஆதிதிராவிடர், மலைவாழ் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியம் ரூ.94 ஆயிரமும், பெரு விவசாயிகளுக்கு மானியம் ரூ.75 ஆயிரமும் வழங்கப்படுகிறது.

இதில், வேளாண் இணை இயக்குநர் சபாநடேசன், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் தமிழ்செல்வன், தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் ராமகவுண்டர், விவசாயிகள் ராஜா, வேலு, பெருமா, மகாராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்

**வாழப்பாடியில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டம்**

வாழப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது .

சேலம் மாவட்டம், வாழப்பாடியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில், விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் சேலம் விற்பனைக்குழுச் செயலர் செல்லதுரை தலைமையில் நடைபெற்றது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பணிகள் குறித்து விவசாயிகளிடத்தில் விளக்கிக் கூறினார். வாழப்பாடி விற்பனைக்கூட பொறுப்பாளர் தமிழ்வாணன் பேசுகையில், வாரந்தோறும் புதன்கிழமை மஞ்சள், கொப்பரைத் தேங்காய் ஏலம் நடத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதில், வேளாண் அலுவலர் பிரேமா, உதவி வேளாண் அலுவலர் கோவிந்தராஜு மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்குழு பணியாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நெல் பயிர்க் காப்பீட்டுக்கு ஜூலை 31-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்**

நெல் சாகுபடி விவசாயிகள், பயிர்க் காப்பீடு பிரிமியத்தை ஜூலை 31-ம் தேதிக்குள் செலுத்தி, காப்பீடுத் திட்டத்தில் இணையுமாறு இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவன தலைமை மண்டல மேலாளர் பாரதி வஜ்ரவேலு வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நிகழாண்டில் காரீப் பருவ சாகுபடி பயிர்களுக்கு மத்திய, மாநில அரசுகள், இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மூலம் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றன. நெல் (கார் குறுவை, சொர்ணவாரி, சம்பா, தாளடி), சோளம், கம்பு, நிலக்கடலை உள்பட 20 பயிர்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கார், குறுவை, சொர்ணாவாரி நெல் பயிர்களுக்கு கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 228 வீதமும், கடன் பெறாத மற்ற விவசாயிகள் ரூ. 254 வீதமும் காப்பீடு பிரிமியம் செலுத்த வேண்டும். சம்பா, தாளடி நெல் பயிர்களுக்கு கடன் பெறாத விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 134 வீதமும், மற்ற விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 149 வீதமும் காப்பீடு பிரிமியம் செலுத்த வேண்டும்.

கார், குறுவை, சொர்ணவாரி நெல் பயிர்களுக்கான பயிர்க் காப்பீட்டுக்கு ஜூலை 31-ம் தேதிக்குள் பிரிமியம் செலுத்த வேண்டும். சம்பா, தாளடி நெல் பயிர்களுக்கு டிச. 15-ம் தேதிக்குள் பிரிமியம் செலுத்த வேண்டும்.

தங்கள் விளைப் பயிர்களுக்குப் பயிர்க் காப்பீடு பெற விரும்பும் விவசாயிகள், குறித்த காலத்துக்குள் சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலரின் சான்றைப் பெற்று, முன்மொழிவுப் படிவத்துடன்

தங்கள் சேமிப்புக் கணக்கு உள்ள வங்கியில் உரிய பிரிமியத்தை செலுத்த வேண்டும் என அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளிநாட்டு உணவு தயாரிக்கும் பயிற்சி**

புதுக்கோட்டை அருகே ஆரியூரில் உள்ள மகாத்மா சர்வதேச உணவக மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களுக்கு வெளிநாட்டு உணவுப் பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

கல்லூரித் தலைவர் என். முகமது நாசர் தலைமையில் நடைபெற்ற பயிற்சியில், முதல்வர் பி. பரமேஸ்வரன், விரிவுரையாளர் விஜய்கார்த்திக் ஆகியோர் பங்கேற்று வெளிநாட்டு கேக் மற்றும் பேக்கரி உணவு வகைகள் தயாரித்தல் குறித்த செய்முறைப் பயிற்சி அளித்தனர்.

இதில், பல்வேறு விதமான பேக்கரி மற்றும் பன்னாட்டு உணவு வகைகளை தயாரித்தல், அதை அலங்கரிப்பது, அழகுபடுத்துவது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. முன்னதாக, கல்லூரித் தாளாளர் என். முகமதுநாசர் பேசுகையில், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் பணிபுரிய இருக்கும் மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி உதவிகரமாக அமையும். தொழில் கல்வி பெறும் மாணவர்கள்கூட தாங்கள் படித்ததை தங்கள் பணிகளில் நேரடியாகப் பயன்படுத்துவது குறைவு. ஆனால், ஹோட்டல் மேனேஜ்மென்ட் கல்வி என்பது படித்ததையும், பயிற்சி பெற்றதையும் முழுமையாக உபயோகிக்கும் கல்வியாக உள்ளது. அதனால்தான் மாணவர்களுக்கு நட்சத்திர ஹோட்டல் போன்ற இடங்களை உருவாக்கி பயிற்சி அளிக்கிறோம். பாடத்திட்டத்தில் 90% செய்முறை பயிற்சியாகவும், மாணவர்கள் பயிற்சி பெறும் ஹோட்டல்களில், அவர்களின் பயிற்சியையே பகுதிநேர வேலையாக மாற்றி ஊக்கத்தொகை கொடுப்பதால், படிக்கும் போதே ஊதியம் பெறத்தொடங்கி விடுகின்றனர். பல நாட்டு பழக்கவழக்கங்கள், மொழிகள், ஆங்கிலம், ஹிந்தி, பிரெஞ்சு, சீன மொழிகள், உணவுத் தயாரிக்கும் முறைகள், பண்பாடு மற்றும் நடைஉடை பாவனைகளைக்

கற்றுத் தருவதால், எந்த நாட்டுக்கு சென்றாலும் மாணவர்கள் எளிதில் நல்ல பெயரை பெற முடியும் என்றார்.

பயிற்சியில், 450-க்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றனர்.

**உர விற்பனையாளர்களுக்கு இணையதளப் பதிவு பயிற்சி**

கந்தர்வகோட்டை அருகே குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் உரம் விற்பனை செய்யும் விற்பனையாளர்களின் இடுபொருள் இருப்பு விவரங்களை வேளாண் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பான பயிற்சி கீரனூரில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரெ. சதானந்தம் தலைமை வகித்து பேசியது: உர விற்பானையாளர்கள் விற்பனை செய்யும் உரங்களின் இருப்பு விவரங்களை வேளாண் இணையதளத்தில் பதிவுசெய்வதன் மூலம் உர இருப்பு விவரங்களை

அனைவரும் எளிதாக அறிந்துகொள்ள இயலும். இதனால், உரத் தட்டுபாடு பிரச்னைகள் வராமல், விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் உரங்கள் கிடைப்பதன் மூலம் விவசாய உற்பத்தியை பெருக்க முடியும் என்றார். வேளாண்மை அலுவலர் எஸ். ராஜசேகரன் உர இருப்பு விவரங்களை வேளாண் இணையதளத்தில் பதிவு செய்வதன் அவசியத்தை விளக்கினார். வேளாண்மை அலுவலர் அ. வேல்முருகன் உர இருப்பு விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் முறைகளை செய்துகாட்டினார். முன்னதாக வேளாண்மை உதவி இயக்குநர் மு. சங்கரலட்சுமி வரவேற்றுப் பேசும்போது, உரம் இருப்பு விவரங்களை உடனடியாக பதிவேற்றம் செய்யாத உர விற்பனையார்கள் மீது உர கட்டுபாடு ஆணை 1985-ன்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் கே.எஸ். ஆதவா செய்திருந்தார். குன்றாண்டார்கோவில் வட்டாரத்தைச் சேர்ந்த உரம் மற்றும் பூச்சிமருந்து விற்பனையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

**புத்தூரில் நவீன இயந்திரம் மூலம் நடவுப்பணி**

தஞ்சாவூர் மாவட்டம்,பாபநாசம் வட்டம் புத்தூர் கிராமத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் நவீன இயந்திரம் மூலம் நடவு செய்து நாற்றங்கால் தயாரிக்கும் பணியை மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் புதன்கிழமை தொடக்கி வைத்தார். அப்போது அவர் பேசியது:

தற்போது டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீரைக் கொண்டு குறுவை சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆள் பற்றாக்குறையால் விவசாயிகள் இயந்திரங்களை கொண்டு விரைவாகவும் சிக்கனமாகவும் நடவுப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு குறுவை பணிகள் வோளாண் பொறியியல் துறை மூலம் கட்டணமின்றி செய்து கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தனிப்பட்ட பாசன வசதி கொண்டுள்ள காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் அனைவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நடவு இயந்திரம் மூலம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் அதற்கான விண்ணப்பங்களை வட்டார அளவிலான வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலும்,வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும் பெறலாம். இயந்திரங்கள் மூலம் நடவு செய்வதற்கான நாற்றுக்களை பாய் நாற்றங்கால் அல்லது தட்டு நாற்றங்கால் மூலம் விவசாயிகளே தயார் செய்து கொள்ளலாம். இதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் கூடுதல் விவரங்களையும் கண்காணிப்புப் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, தஞ்சாவூர், தொலைபேசி எண்.04362-235168,செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, தஞ்சாவூர் தெலைபேசி எண் 04362-235570 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு கட்டணமில்லா நடவுப் பணிகளை மேற்கொண்டு விரைவான அளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ள வேண்டும் என்றார்.

பாபநாசம் எம்எல்ஏ இரா. துரைக்கண்ணு,கும்பகோணம் சார் ஆட்சியர் கோவிந்தராவ்,ஒன்றியக் குழுத் தலைவர் கே. கோபிநாதன்,மாவட்ட கூட்டுறவுச் சங்க ஒன்றியத் தலைவர் எஸ். மோகன்,வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சென்னியப்பன்,உதவி செயற்பொறியாளர்கள் அப்துல்நசீர், ராஜு,உதவிப் பொறியாளர் திருஞானசம்பந்தம்,வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ.சேகர், துணை இயக்குநர் சொக்கலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**குமரியில் ரம்புட்டான் பழங்களின் அறுவடை தொடங்கியது**

குமரி மாவட்டத்தில் ரம்புட்டான் பழ மரங்களில் அறுவடை தொடங்கியுள்ளதையடுத்து இந்தப் பழங்கள் அதிக அளவில் கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளன. மிருதுவான முள்களுடன் ரப்பர் பொம்மைபோல் காணப்படும் ரம்புட்டான் பழங்களின் தாயகம் மலேசியா ஆகும். இப்போது இந்த பழங்கள் இந்தியா, இலங்கை உள்பட உலகின் பல நாடுகளில் விளைகின்றன. தமிழகத்தில் இப்பழங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்திலும், கொடக்கானல், ஊட்டி போன்ற பகுதிகளிலும் விளைகின்றன. மஞ்சள் மற்றும் சிகப்பு நிறத்துடன் காணப்படும் இப்பழங்களின் உள்ளே முட்டை வடிவில் சதைப்பற்றுடன் காணப்படும் விதை அதிக இனிப்புடன் இருக்கும். இதை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சுவைக்கின்றனர்.

சிறுவகை மரமான ரம்புட்டான் மரங்கள், கன்னியாகுமரி மாவட்ட காலநிலைக்கு அதிகம் வளருமென்ற போதிலும், பராமரிப்பு காரணமாக குறைந்த அளவிலேயே இம்மரங்கள் இங்கு நடவு செய்யப்பட்டுள்ளன.

சுருளகோடு, பொன்மனை, ஓமனாபுரம், பிணந்தோடு, களியல், ஆறுகாணி, பேச்சிப்பாறை உள்பட குறிப்பிட்ட சில இடங்களில்தான் இந்த பழமரங்கள் வீட்டுத் தோட்டங்களில் காணப்படுகிறது. ஜூன்,

ஜூலை மாதங்கள் ரம்புட்டான் பழங்களின் சீசன் காலமாகும். இம்மாதங்களில் ரம்புட்டான் மரங்களில் கொத்துக் கொத்தாக பழங்கள் காய்த்துத் தொங்கும். இப்போது ரம்புட்டான் பழங்கள் அறுவடை தொடங்கியுள்ள நிலையில் சந்தைகளில், கடைகளில் இப்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. குமரி மாவட்டத்தில் ஒரு கிலோ ரம்புட்டான் பழம் ரூ.150 முதல் ரூ.200 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து பிணந்தோடு பகுதியைச் சேர்ந்த விவசாயி சாம்ராஜ் கூறியதாவது: ரம்புட்டான் பழ மரங்கள் அதிக வருவாயைக் கொடுக்கும் பழ மரங்களாகும், ஆனால் சீசன் காலங்களில் இப்பழங்களை அணில், வௌவால், குரங்கு மற்றும் பறவையினங்களிடமிருந்து காப்பது பெரும் சவாலாகும். சீசன் காலங்களில் இந்த மரங்களின் மீது வலை விரித்தால் மட்டுமே பழங்களை பறவையினங்களிடமிருந்து காத்து அறுவடை செய்ய முடிகிறது என்றார் அவர்.

**மரவள்ளி பயிரில் செம்பொன் சிலந்தி: கட்டுப்படுத்த ஆலோசனை**

மரவள்ளி பயிரில் செம்பொன் சிலந்தியைக் கட்டுப்படுத்த தோட்டக்கலைத் துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதுகுறித்து கடலூர் தோட்டக்கலைத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: அண்ணாகிராமம் வட்டாரத்தில் தோட்டக்கலைப் பயிரான மரவள்ளி அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இவைகள் தற்போது 5 முதல் 8 மாத பயிராக உள்ளன. இந்தப் பயிர்களில் தற்போது செம்பொன் சிலந்தி (ரெட் ஸ்பைடர் மைட்ஸ்) தாக்குதல் திட்டுத்திட்டாக காணப்படுகிறது. மரவள்ளி இலையின் அடிப்பகுதியில் திட்டுத்திட்டாக செம்பொன் நிறத்தில் இதன் தாக்கம் இருக்கும். இது வெயில் காலங்களில் அதிகளவு காணப்படும். வயலில் ஆங்காங்கே திட்டுத்திட்டாக இலைக்கொட்டுதல் இருக்கும். இதனால் செடிகள் வாடி விட வாய்ப்பு உள்ளது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 18.5 இசி

மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 மில்லி லிட்டர் கலந்து காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் இலைகளில் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். இதன் மூலம் செம்பொன் சிலந்தி பூச்சியைக் கட்டுப்படுத்தலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டம், மலைப் பயிர்கள் தொடர்பான விழிப்புணர்வு முகாம்**

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் வானூர் வட்டாரத்தில் விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமிற்கு தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கு.அன்பழகன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய மூங்கில் இயக்கம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

மா அடர் நடவு, மா இயல்பான இடைவெளியில் நடவு, வீரிய ஒட்டுக் காய்கறிகள், மலர்கள், வாசனைப் பயிர்கள், பழைய தோப்பை புதுப்பித்தல் ஆகியவை பற்றியும் பசுமைக் குடில் மற்றும் நிழல் வலைக்குடில் அமைத்தல் நெகிழி நிலப் போர்வை அமைத்தல், மனித வள மேம்பாடுப் பயிற்சி, அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை ஆகிய இனங்கள் குறித்தும் மானியம் பெற்றிட விவசாயிகள் சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் ஆரோக்கியராஜ், வட்டார தொழில் நுட்ப மேலாளர் நரசிம்மராவ், தோட்டக்கலைத் துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் தேவேந்திரன், பிரபு, பக்தவச்சலம், கோபிநாத் உள்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அழிவின் விளிம்பில் 'கிரீன் கேஜ்'



கொடைக்கானல் :கொடைக்கானலில் 'கிரீன் கேஜ்' எனும் பச்சை பிளம்ஸ் பழ மரங்கள் காணாமல் போய்விட்டன.கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகள் மலைப் பிரதேசங்களில் விளையக்கூடிய பிளம்ஸ் பழங்கள், பேரிக்காய், வால்பேரி, சர்க்கரை பேரி, ஊட்டி பேரி போன்றவற்றை விரும்பி வாங்கி செல்வர். பிளம்ஸ் வகைகளில் பல அரிய வகைகள் காய்த்து குலுங்கிய காலங்கள் மாறி, தற்போது எப்போதும் மே மாதங்களில் கிடைக்கும் பிளம்ஸ் மட்டுமே கிடைக்கிறது. கருஞ்சிவப்பு கலரில் இருக்கும் கரி பிளம்ஸ், 'கிரீன் கேஜ்' எனப்படும் பச்சை பிளம்ஸ் போன்ற பழங்கள் தற்போது காண்பதே அரிதாக உள்ளது. கிரீன் கேஜ் பிளம்ஸ் இளம்பச்சை நிறத்திலும், நன்கு பழுத்தவுடன் மஞ்சள் நிறத்திலும் காணப்படும். இவை அளவில் பெரிதாக உள்ளது. தோற்றம் மாங்காய் போன்று இருப்பதால் பழக்கடைகளில் இதை மாங்காய் பிளம்ஸ் என்று கூறுகின்றனர். 2000 ஆண்டிற்கு முன்னர் விளைந்த அரிய வகை பிளம்ஸ் வகைகள்

தற்போது பழ சந்தைகளில் காணப்படவில்லை. புளிப்பும், இனிப்பும் சுவை கலந்த கிரீன் கேஜ் பழங்கள் பல ஆண்டுகள் கழித்து பழக்கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளன. தண்ணீர் சத்து நிறைந்தஇதில் கால்சியம் சத்து அதிகம். அல்சர் நோயை குணப்படுத்தும் என்கின்றனர்.

கொடைக்கானல் வில்பட்டி கிராமம் வாழைக்காட்டு ஓடை பகுதியில்இவை விளைகின்றன.ஒரு கிலோ கிரீன் கேஜ் ரூ.200 க்கு விற்கிறது. பஷீர் அகமதுஎன்பவர்கூறியதாவது: தற்போது வரத்து முற்றிலுமாக இல்லை. அதற்கு காரணம் கால சீதோஷ்ண நிலை மாறியதே. தற்போது ஒரு சிலர் வளர்த்து வருகின்றனர், என்றார்.

**கொடைக்கானலில் துவங்கியது அவக்கோடா பழ சீசன்**



கொடைக்கானல், :கொடைக்கானலில் 'பட்டர் புரூட்' என்றழைக்கப்படும் அவக்கோடா பழங்களின் வரத்து துவங்கியுள்ளது.கொடைக்கானலில் 'வெண்ணெய் பழம்' என இதை அழைக்கின்றனர். இரண்டாம் சீசன் காலங்களான ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் காய்த்து சந்தையில் விற்பனைக்கு வரும். தற்போது ஜூலை மாதத்திலேயே வரத்து துவங்கியதால் பழக்கடைகளில் விற்பனைக்கு வைத்துள்ளனர்.அவக்கோடா பழங்களை சுற்றுலா பயணிகள் காயாக

வாங்கி, பழுக்க வைத்து பச்சை நிறத்திலுள்ள மேல் பகுதியை நீக்கி உள்ளே வெண்ணெய் போன்ற பகுதியை பாலுடன் சேர்த்து கலக்கி, சர்க்கரையும் சேர்த்து சாப்பிடுகின்றனர். இது ஐஸ்கிரீம் போன்ற சுவை உள்ளதால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவர். அக்காலத்தில் ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த அவக்கோடா பழங்கள் தற்போது பல நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. பெண்களுக்கான அழகு சாதன பொருட்கள், பாடி லோஷன், ஷாம்பூ, முகத்திற்கு போடும் கிரீம் போன்றவையும் தயாரிக்கப்படுகிறது. நட்சத்திர ஓட்டல்களில் புரோட்டா, சப்பாத்தி போன்ற உணவு பொருட்கள் மிருதுவாக இருக்க அவக்கோடா பழத்தின் வெண்ணெய் போன்ற சதை பகுதியை கலந்து தயாரிக்கின்றனர்.

இந்த அவக்கோடா பழங்களை துபாய் போன்ற நாடுகளில் விரும்பி சாப்பிடுகின்றனர். எனவே தற்போது சீசன் துவங்கியுள்ளதால் கொடைக்கானல், பழநி ரோடு பேத்துப்பாறை பகுதிகளில் விவசாயிகள் இதை வளர்த்து வருமானம் ஈட்டுகின்றனர்.

பழவியாபாரி ஜின்னா கூறியதாவது: அவக்கோடா பழங்கள் ரத்த ஓட்டத்திற்கு நல்லது. உடலுக்கு தேவையான நல்ல கொலஸ்ட்ரால் இப்பழத்தில் உள்ளது. எனவே இதயத்திற்கு மிகவும் நல்லது எனக்கூறி விரும்பி சாப்பிடுகின்றனர். ஒரு கிலோ ரூபாய் 120 லிருந்து ரூ 160 வரை விற்பனையாகிறது, என்றார்.

**மேட்டூர் அணை திறப்பு அதிகரிப்பு**

மேட்டூர் :மேட்டூர் அணையிலிருந்து நீர்திறப்பு நேற்று மாலை 4:00 மணி முதல் வினாடிக்கு இரண்டு ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து நீர்வரத்து அதிகரித்ததால் கடந்த 25ம் தேதி 74 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று 84.580 அடியாக

உயர்ந்தது. பருவ மழை குறைந்ததால் நேற்று அணைக்கு நீர்வரத்து 3,581 கன அடியாக சரிந்தது.வினாடிக்கு, 500 கன அடியாக இருந்த மேட்டூர் அணை டெல்டா நீர் திறப்பு கடந்த 3ம் தேதி, வினாடிக்கு 1,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.இந்நிலையில் இது நேற்று மாலை 4:00 மணி முதல் வினாடிக்கு, 2,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.—

**சுவை அதிகமான சிறுமலை பலா சீசன் துவக்கம்: வரத்து அதிகரிப்பு: 5 கிலோ காய் ரூ.25க்கு சரிவு**



திண்டுக்கல் :திண்டுக்கல் சிறுமலையில் பலா விளைச்சல் அதிகமானதால் 5 கிலோ எடையுள்ள பழம் ரூ.25க்கு கிடைக்கிறது.தமிழகத்தில் சிறுமலை பலா புகழ் பெற்றது. அதிகளவு இனிப்பு தன்மை உள்ளது. சுளைகள் சிறிதாக இருந்தாலும், சுளையில் உள்ள நீரின் அளவு குறைவாக இருப்பதால், உண்பதற்கு சுவையாக இருக்கும். மேலும் உரம் இன்றி இயற்கையாகவே வளரக் கூடியது.பிப்ரவரி மாதத்தில் பூக்க துவங்கிய பலா, தற்போது அறுவடைக்கு வந்துள்ளது. இந்த சீசன் ஆகஸ்ட், செப்டம்பர் மாதம் துவக்கம் வரை நீடிக்கும். கடந்தாண்டு மழை இல்லாததால் பலா விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் 5 கிலோ

கொண்ட பலா காய்கள் ரூ.100 வரைக்கும் விற்பனையானது.இந்தாண்டு ஓரளவு மழை பெய்ததால், சிறுமலையில் பலா விளைச்சல் அதிகமாகியுள்ளது. இதனால் வரத்தும் அதிகமாகி விலை சரிந்துள்ளது. 5 கிலோ கொண்ட பலா ரூ.25க்கு விற்கிறது. 30 கிலோ கொண்ட காய் வரை விற்பனைக்கு வந்துள்ளது.

சிறுமலை 'செட்' வியாபாரி தங்கவேல் கூறியதாவது: சிறுமலை பலா பழம் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். இது பல மாவட்டங்களுக்கும், கேரளாவிற்கும் அனுப்பப்படுகிறது. தற்போது சீசன் துவங்கியுள்ளதால், வரத்து அதிகரித்து வருகிறது. இன்னும் வரத்து அதிகமாகும்போது, 5 கிலோ பழம் ரூ.10 முதல் ரூ.15க்கு கூட கிடைக்கலாம். இந்தப்பழம் ஒரு மாதம் வரைக்கும் கெடாமல் தாங்கும் தன்மை கொண்டது. பலா பிஞ்சுகளை கூட்டு வைத்து சாப்பிட நன்றாக இருக்கும், என்றார்.

## திண்டுக்கல்லில் விளையுது சூட்டை தணிக்கும் கலாக்காய்



திண்டுக்கல் :சூட்டை தணிக்கும் மூலிகையான சீமை கலாக்காய் திண்டுக்கல்லில் விளைகிறது. மேற்குதொடர்ச்சி, சிறுமலையில் அடந்த வனப்பகுதியில் கலாக்காய் மரங்கள் உள்ளன. கலாக்காய்கள் சூடை

தணிக்கும் தன்மை கொண்டது. சிறுநீர் கடுப்பு, வெள்ளை படுதல் போன்ற நோய்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கும். பல்வேறு மருத்துவ குணம் கொண்ட கலாக்காய் மரங்கள் திண்டுக்கல் பலக்கனுாத்தை சேர்ந்த விவசாயி மணிவேலின் தோட்டத்தில் விளைகிறது.இந்த மரம் ஓராண்டில் காய்க்க துவங்குகிறது. காய்கள் வெளிறிய மஞ்சளாகவும், அரை பழத்தில் ரோஸ் கலந்த மஞ்சளாகவும் இருக்கும். இவை 2 மாதங்களில் மரத்திலே முழுமையாக பழுக்கின்றன. பழம் கருப்பு நிறமாக இருக்கும். பழத்தை நசுக்கினால் அடர் சிவப்பு நிற திரவம் வருகிறது. இதனால் இயற்கை சாயமாகவும் பயன்படுத்தலாம்.விவசாயி மணிவேல் கூறியதாவது: ஒவ்வொரு மரத்திலும் 100 கிலோ வரை காய்க்கும். பழத்தை அப்படியே சாப்பிடலாம் அல்லது ஜூஸ் செய்து குடிக்கலாம். இவற்றை மேற்குதொடர்ச்சி மலையில் இருந்து கொண்டு வந்தேன். தற்போது ஒட்டு முறையில் கலாக்காய் கன்றுகளை உற்பத்தி செய்கிறேன். ஒரு செடியை ரூ.30 க்கு விற்க உள்ளோம், என்றார். தொடர்புக்கு99449 67444.

## தாண்டிக்குடியில் பேன்சி கோழி, உயர்ரக முயல் பண்ணை



தாண்டிக்குடி :தாண்டிக்குடியில் பேன்சி ரக கோழி மற்றும் உயர் ரக முயல் வளர்ப்பு பண்ணை அமைத்து விவசாயி பராமரித்து வருகிறார்.திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடியில் பண்ணை அமைத்து சில்க்கி, பேந்தம், போலீஸ் கிராப், மினிப்ளோர் வகை பேன்சி ரக கோழிகளும், மணிலா வாத்து, ஒயிட் ஜெயின்ட், சோவியத் செஞ்சுலா, நியுசிலாந்து ஒயிட் வகை முயல் வகைகளையும், ராட் வில்லர் உயர் ரக நாய் வளர்ப்பு என விவசாயி வல்லவன் வளர்த்து வருகிறார்.டிப்ளமோ சிவில் இன்ஜினியரிங் முடித்த இவர், தாண்டிக்குடியில் நிலவும் சீதோஷ்ண நிலை செல்ல பிராணிகள் வளர்வதற்கு ஏதுவாக இருப்பதை அறிந்து விவசாய பணிகளுக்கு இடையே இவற்றை வளர்த்து பராமரித்து வருகிறார்.அவர் கூறியதாவது: விவசாயத்தின் மீது ஏற்பட்ட ஆர்வத்தால் நகர் புறத்தை விடுத்து மலைப்பகுதிக்கு வந்தேன். விவசாயத்துடன் பண்ணை அமைத்து பேன்சி ரக கோழிகள், வாத்து, நாய், முயல் ஆகியவற்றை வளர்க்கிறேன். இதற்கு முறையான பராமரிப்பு, நோய் தடுப்பு மேற்கொண்டு ஆரோக்யமாக வளர்வதை கண்காணிப்பதால் மனநிம்மதி ஏற்படுகிறது. இவற்றின் எச்சங்கள் நல்ல தொழு உரம். இதை

பயன்படுத்தி விவசாயம் செய்வதால் நல்ல மகசூல் கிடைக்கிறது.பேன்சி ரக கோழிகள் அதிகபட்சம் அரைகிலோ எடையும், ஐந்தாண்டுகள் வாழும் தன்மை கொண்டவை. முயலை பொறுத்தமட்டில் ஐந்து கிலோ எடை கொண்டிருக்கும். இவற்றின் வளர்ப்பு முறை, பராமரிப்பு குறித்து ஆலோசனை வழங்கி வருகிறேன். ரகத்திற்கு ஏற்றாற் போல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது, என்றார். இதுகுறித்து அறிய 9943719234 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## சிறுதானிய விற்பனை மையம் துவக்கம்

மதுரை:மதுரை யானைக்கல்லில் மாநகராட்சி சார்பில் மகளிர் சுயஉதவிக்குழு தயாரிப்புகளின் விற்பனை மையம் துவங்கப்பட்டது.புகார் மையமாக செயல்பட்டு வந்த இடத்தில் அதிகாரிகள் இல்லாமலும், புகார் மனு கொடுக்க பொதுமக்கள் வராததாலும் அந்த இடம் விற்பனை மையமாக மாற்றப்பட்டது. 'அம்மா மலிவு விலை இயற்கை பானங்கள் மற்றும் சிறுதானிய உணவுப் பொருட்கள் விற்பனை மையத்தை' மேயர் திறந்து வைத்து பேசுகையில், " இங்கு தினமும் நிலவேம்பு கஷாயம் இலவசமாக வழங்கப்படும். அனைத்து வகையான சூப் வகைகளும், மாவு வகைகளையும் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை பொதுமக்கள் வாங்கலாம்" என்றார்.

கமிஷனர் கதிரவன், நகர் நலஅலுவலர் யசோதாமணி, உதவி கமிஷனர் நாராயணன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## மேட்டூர் அணை நீர்திறப்பு:2,000 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர்:மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு, நேற்று மாலை, 4 மணி முதல் வினாடிக்கு, 2,000 கனஅடியாக அதிகரிப்பட்டது.காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து, நீர்வரத்து அதிகரித்ததால், கடந்த, 25ம் தேதி, 74 அடியாக இருந்த மேட்டூர் அணை

நீர்மட்டம் நேற்று, 84.580 அடியாக உயர்ந்தது. பருவமழை தீவிரம் குறைந்ததால் நேற்று அணை நீர்வரத்து, 3,581 கனஅடியாக சரிந்தது.வினாடிக்கு, 500 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு, கடந்த, 3ம் தேதி, வினாடிக்கு, 1,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று மாலை, 4 மணி முதல் நீர்திறப்பு வினாடிக்கு, 2,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

## உணவு பாதுகாப்பு அலுவலர் மீண்டும் எச்சரிக்கை:8,400 கிலோ கலப்பட வெல்லம் பறிமுதல்

சேலம்:சேலம், சிவதாபுரத்தில் உள்ள வெல்லமண்டிக்கு, நேற்று சர்க்கரை கலந்து உற்பத்தி செய்து, விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட, 8,400 கிலோ வெல்லம் பறிமுதல் செய்யப்பட்டது. "கலப்பட வெல்லம் விற்பனைக்கு வந்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, உணவு பாதுகாப்பு அலுவலர் அனுராதா, வெல்ல ஆலை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.சேலம், சிவதாபுரம், மூலப்பிள்ளையார் கோவில் அருகில், வெல்லம் ஏல மண்டி உள்ளது. ஓமலூர், காமலாபுரம், வட்டக்காடு, ஒட்டத்தெரு, வெள்ளாளப்பட்டி, நாலுக்கால்பாலம், தீவட்டிப்பட்டி உள்ளிட்ட இடங்களில், 100க்கும் மேற்பட்ட வெல்ல ஆலைகள் உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும், வெல்லம், சிவதாபுரம் ஏல மண்டியில் ஏலம் விடப்படும். செவ்வாய்ப்பேட்டை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வெல்லத்தை வாங்கி செல்வர்.

சேலத்தில் உள்ள பெரும்பாலான வெல்ல ஆலைகளில், சர்க்கரை கலந்து வெல்லம் உற்பத்தி செய்யப்படுவதாக, சென்னை உணவு பாதுகாப்பு துறை ஆணையருக்கு புகார் சென்றது. சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் அனுராதா, நேற்று சிவதாபுரத்தில் உள்ள வெல்ல

மண்டியில் திடீர் ரெய்டுக்கு சென்றார். ஆய்வின் போது, ஏழு வேனில், சர்க்கரை கலந்து உற்பத்தி செய்யப்பட்ட வெல்லம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஒவ்வொரு வண்டியிலும், தலா, 1,200 கிலோ, வெல்லம் வீதம், மொத்தம், 8,400 கிலோ பறிமுதல் செய்யப்பட்டது.

இதுகுறித்து சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் அனுராதா கூறியதாவது:

வெல்லம் தயாரிக்க கரும்பை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஒரு டன் கரும்பில், 100 கிலோ வெல்லம் தயாரிக்க முடியும். ஆனால், ஆலை உரிமையாளர்கள், சர்க்கரையை கிலோ 20லிருந்து, 22 ரூபாயக்கு வாங்கி வந்து, வெல்லம் தயாரிக்கின்றனர். வெல்லத்தை கிலோ, 45ல் இருந்து, 50 ரூபாய் வரை, விற்பனை செய்கின்றனர்.

வெல்லத்தை தயாரிக்க 70 பிபிஎம் (பாஸ்பர் மில்லியம்) கெமிக்கல்லை பயன்படுத்தலாம். இதனால், உடலுக்கு தீங்கு ஏற்படாது. ஆனால், இவர்கள் சூப்பர் பாஸ்பேட் (உரம்), சஃபாலைட் (தொழிற்சாலை கெமிக்கல்) ஆகியவற்றை பயன்படுத்தி வெல்லம் தயாரிக்கின்றனர்.

வெல்லம், மஞ்சள் நிறத்தில் காட்சியளிக்க, ஒரு சில ரசாயனங்களை கலக்கின்றனர். இதை பயன்படுத்தும் மக்கள், உடல் நலம் பாதிக்கப்படும். ஓமலூர் பகுதியில் உள்ள பெரும்பாலான ஆலைகளில் இருந்து, வாகனங்களில் வெல்லத்தை கொண்டு வருபவர்கள், எந்தவித பாதுகாப்பு, சுகாதாரம் இல்லாமல் எடுத்து வருகின்றனர்.

சுகாதாரத்துறையில் பெறப்பட்ட அனுமதி, வெல்லம் உற்பத்தி செய்யப்பட்ட தேதி, அளவு உள்ளிட்ட எந்த விவரங்களும் இல்லாமல் எடுத்து வருகின்றனர். உணவு பாதுகாப்பு விதிமுறைக்குட்பட்டு, 100 சதவீதம், கரும்பு சாற்றிலிருந்து வெல்லத்தை தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆலை உரிமையாளர்கள் தொடர்ந்து, இதே

போல விதிமுறைக்கு புறம்பாக செயல்பட்டால், ஆலைகளுக்கு சீல் வைப்பது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## இரண்டாம் சீசனுக்கு பூங்காவை தயார் செய்யும் பணி துவக்கம்

ஊட்டி:ஊட்டி தாவரவியல் பூங்காவை, இரண்டாம் சீசனுக்கு தயார்படுத்தும் பணிகள் துவங்கியுள்ளன.நீலகிரி மாவட்டத்தில், வரும் செப்.,- அக்., மாதம், இரண்டாம் சீசன் துவங்கவுள்ளது. இதற்காக, ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் செடிகளை நடவு செய்யும் பணிக்கான ஆயத்த கட்டப் பணிகள் துவங்கியுள்ளன.பூங்கா நிர்வாகத்தினர் கூறுகையில், 'இரண்டாம் சீசனுக்கு பூங்காவை தயார்படுத்தும் நோக்கில், மேரி கோல்டு, லூாப்பின், குபியா உட்பட பல வகை மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளன. நடப்பாண்டு இரண்டாவது சீசனுக்காக, 25 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளன.இதற்காக விதை சேகரிப்பு பணி முடிந்துள்ளது. 5,000 மலர் தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு, பார்வைக்கு வைக்கப்பட உள்ளன. சில மலர் செடிகள், அடுத்தாண்டு ஏப்ரல், மே மாத முக்கிய சீசனுக்கு தயார் படுத்தும் பணிகள் துவங்கியுள்ளன' என்றனர்.

## கோழி தீவனத்திற்குசெல்லும் சிறிய மீன்கள்

கீழக்கரை:கீழக்கரை, ஏர்வாடி, மங்களேஸ்வரிநகர், அலவாய்க்கரை வாடி கடல் பகுதிகளில் தற்போது காரா, பேத்தை, சூடை, பேச்சாளை, கிழங்கான் உள்ளிட்ட மீன்கள் மீனவர்களின் வலைகளில் அதிகம் பிடிபடுகின்றன. அவற்றில் பெரிய மீன்கள் மட்டும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. சிறிய மீன்களை திறந்த மைதானத்தில் 2 நாட்கள் காயவைத்து, அவற்றை தரம் பிரித்து பெரிய சாக்குகளில்

நிரப்புகின்றனர். அவற்றை 1கிலோ ரூ.30 வீதம் கோழித்தீவனத்துடன் அரைத்து சேர்ப்பதற்காக வெளிமாவட்ட வியாபாரிகள் வந்து லாரிகளில் வாங்கிச்செல்கின்றனர்.

**பயிர் மதிப்பீட்டு ஆய்வுக்கு புத்தாக்க பயிற்சி கலெக்டர் தொடங்கி வைத்தார்**



தேனி,

தேனி மாவட்டத்தில் பயிர் மதிப்பீட்டு ஆய்வு குறித்த புத்தாக்க பயிற்சியை கலெக்டர் வெங்கடாசலம் தொடங்கி வைத்தார்.

<u>பயிர் மதிப்பீட்டு ஆய்வு</u>

நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் சார்பில் பொது பயிர் மதிப்பீட்டு ஆய்வு நடத்தப்படும். அந்த வகையில் தேனி மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான பயிர் மதிப்பீட்டு ஆய்வு பணிகள் தொடங்கி உள்ளன. இந்த ஆய்வுக்காக புத்தாக்க பயிற்சி தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இதில் மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி பயிற்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் இயக்குனர் மாணிக்கம், முதுநிலை புள்ளியியல் அலுவலர் சுந்தரராஜன், புள்ளியியல் துணை இயக்குனர் அப்துல் கரீம் உள்பட பலர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். கிராம நிர்வாக அலுவலர்கள், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள், புள்ளியியல் துறை அலுவலர்கள் ஆகியோருக்கு இந்த புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

<u>அறுவடை சோதனை</u> இதுகுறித்து புள்ளியியல் துறை துணை இயக்குனர் அப்துல்கரீம் கூறியதாவது:– வேளாண் விளை பொருட்களின் மொத்த விளைச்சலை கணக்கிட்டு, உணவுப் பொருட்கள் உற்பத்தி அளவை கணக்கீடு செய்யும் வகையில் இந்த பயிர் மதிப்பீட்டு ஆய்வு செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 3 பருவங்களுக்கு மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்படும். கிராம நிர்வாக அலுவலர்கள் அளிக்கும் அடங்கலை வைத்து, பயிர் சாகுபடி விவரங்களை பதிவு செய்வது முதல் பணியாகும். 2–வது பணியாக பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். பயிர் விளைச்சல் அடைந்த பின்பு, புள்ளியியல் துறையின் முதன்மை செயலர் மற்றும் ஆணையரால் தேனி மாவட்டத்தில் சில கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்படும். நெல், கரும்பு, சோளம், கம்பு, ராகி, பயறு வகைகள், பழங்கள், காய்கறிகள் என அனைத்து வகையான பயிர்களும் அறுவடை சோதனைக்கு உட்படுத்தப்படும்.

வேளாண்மை களப்பணியாளர்களான வேளாண்மை உதவி அலுவலர்கள் மூலம் அறுவடை பணி மேற்கொள்ளப்படும். இந்த அறுவடை என்பது

எதேச்சை எண் (ரேண்டம்) முறையில் மேற்கொள்ளப்படும். 5 மீட்டர் அகலம், 5 மீட்டர் நீளம் என்ற அளவில் விளைச்சல் அடைந்த நிலத்தில் அறுவடை மேற்கொள்ளப்பட்டு மொத்த விளைச்சல் கணக்கீடு செய்யப்படும். புத்தாக்க பயிற்சி பெற்றவர்களுக்கு விளை நிலங்களில் நேரடி களப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு துணை இயக்குனர் அப்துல்கரீம் தெரிவித்தார்.

**எந்திரம் மூலம் நாற்றங்கால் தயாரிக்கும் பணி கலெக்டர் தொடங்கி வைத்தார்**



புத்தூர் கிராமத்தில் எந்திரம் மூலம் நாற்றங்கால் தயாரிக்கும் பணியை கலெக்டர்

புத்தூர் கிராமத்தில் எந்திரம் மூலம் நாற்றங்கால் தயாரிக்கும் பணியை கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்தார்.

நாற்றங்கால் தயாரிக்கும் பணி

கபிஸ்தலம் அருகே உள்ள கோவிந்தநாட்டுச்சேரி ஊராட்சி புத்தூர் கிராமத்தில் வயலில் குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் எந்திரம் முலம் நாற்றங்கால் தயாரிக் கும் பணி நடைபெற்றது. இந்த பணியை கலெக்டர் சுப்பையன் தெர்டங்கி வைத்தார். அப்போது அவர் கூறுகையில், தஞ்சை

மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரில் இந்த திட்டம் நடைபெற்று வருகிறது. இதில் பாபநாசம் ஒன்றியத்தில் 650 ஏக்கரிலும், குறிப்பாக புத்தூர் கிராமத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் எந்திரம் முலம் நாற்றங்கால் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில் கும்பகோணம் உதவி கலெக்டர் கோவிந்தராவ், துரைக்கண்ணு எம்.எல்.ஏ., ஒன்றியக்குழுத் தலைவர் கோபிநாதன், பேரூராட்சி தலைவர் கருணாநிதி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் மோகன், ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் ஆனந்தி, மாவட்ட கவுன்சிலர் மகேந்திரன், கூட்டுறவு சங்கத் துணைத் தலைவர் அடைக்கலம், ஊராட்சி தலைவர் ஜெனவா பரமசிவம் மற்றும் வேளாண்மை துறை அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ரூ.25 லட்சம் செலவில் குன்னூர் சிம்ஸ் பூங்கா புனரமைக்கும் பணி தொடக்கம்**



குன்னூர் சிம்ஸ் பூங்கா ரூ.25 லட்சம் செலவில் புனரமைக்கும் பணி

தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. சிம்ஸ் பூங்கா

குன்னூரில் தோட்டக்கலைத்துறையின் கீழ் உள்ள சிம்ஸ் பூங்கா முக்கிய சுற்றுலா தலமாக உள்ளது. இதுமட்டுமின்றி இயற்கை காட்சி முனைகளான லேம்ஸ்ராக், டால்பின் நோஸ் ஆகிய சுற்றுலா தலங்களும் உள்ளன. சிம்ஸ் பூங்கா இயற்கை சூழலில் அமைந்து உள்ளதால், சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழையினால் ஏரியில் உள்ள தடுப்பு சுவர் இடிந்து விழுந்தது. இதனை சீரமைப்பதற்காக கடந்த ஏப்ரல் மாதம் ஏரியில் இருந்த தண்ணீர் திறந்து விடப்பட்டது. அப்போது கோடை சீசன் என்பதால் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனை தொடர்ந்து தோட்டக்கலை நிர்வாகம் ஏரியை தூர்வாரும் பணியை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

ரூ.25 லட்சம் செலவில் புனரமைப்பு

தற்போது சீசன் காலம் முடிந்து மலர்கள் வாடியுள்ளன. மேலும், சுற்றுலா பயணிகளின் வருகையும் குறைந்து உள்ளது. இதனை தொடர்ந்து சிம்ஸ் பூங்காவை சீரமைக்கவும், ஏரியை புனரமைக்கவும் தோட்டக்கலை நிர்வாகம் திட்டமிட்டது. இதன்படி நேற்று பொக்லைன் எந்திரம் மூலம் ஏரியின் கரை உடைக்கப்பட்டு தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இந்த தண்ணீர் முற்றிலும் வடிந்த பின்னர் ஏரி தூர்வாரும் பணி தொடங்கப்பட்டது. இதுகுறித்து தோட்டக்கலை அதிகாரிகள் கூறியதாவது:- சிம்ஸ் பூங்கா ரூ.25 லட்சம் செலவில் புனரமைக்கும் பணி தற்போது தொடங்கப்பட்டு உள்ளது. மேலும், இடிந்து விழுந்த பக்கவாட்டு சுவர்கள் சீரமைக்கும் பணியும் நடைபெறும். இதேபோல் பூங்காவில் உள்ள பழுதடைந்த இடங்களும் சீரமைக்கப்படும். இந்த பணிகள் நவம்பர் மாதம் வரை தொடர்ந்து நடைபெறும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**மகசூல் குறைவு காரணமாக மங்குஸ்தான், ஆப்பிள் விலை அதிகரிப்பு**



ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் விளைச்சல் குறைவு காரணமாக மங்குஸ்தான், ஆப்பிள் உள்ளிட்ட பழங்களின் விலை உயர்ந்து உள்ளது.

பழங்கள்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக காய்கறிகள் அதிகளவு பயிரிடப்பட்டு வருகிறது. மேலும் இங்கு ஆப்பிள், மங்குஸ்தான், பிளம்ஸ், பிச்சீஸ், பெர்சிமன், ஆரஞ்சு உள்ளிட்ட பல்வேறு வகையான பழங்கள் விளைவிக்கப்படுகிறது. குறிப்பாக குன்னூர் மற்றும் பர்லியார், கொலக்கம்பை பகுதியில் பழங்கள் அதிகளவு விளைகின்றன.

இதில் பழங்களின் ராணி என்று அழைக்கப்படும் மங்குஸ்தான் பழம் மற்றும் ஆப்பிள், ரம்பூட்டான் பழங்களின் சீசன் தற்போது தொடங்கி உள்ளது. நீலகிரியில் கடந்த 2009-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக தற்போது மேற்கண்ட பழங்களின் மகசூல் குறைந்துள்ளது. இதனால் விலை அதிகரித்துள்ளது.

இறக்குமதி

இது குறித்து பழ வியாபாரி ஒருவர் கூறியதாவது:- நீலகிரியில் விளையும் ரம்பூட்டான், மங்குஸ்தான், ஸ்டார்புருட், வால்நட், பேரிக்காய், பிளம்ஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான பழங்கள் விளைவிக்கப்படுகின்றன. இதில் மங்குஸ்தான் பழம் அதிக நுண்ணூட்ட சத்துக்களை கொண்டது. எனவேதான் இதனை பழங்களின் ராணி என்று அழைக்கிறோம். இந்த பழங்களை சுற்றுலா பயணிகள் அதிகளவு வாங்கி செல்கின்றனர்.

ஆனால் இந்த ஆண்டு போதிய மகசூல் இல்லாததால் கேரளமாநிலம் திருச்சூரில் இருந்து மங்குஸ்தான் மற்றும் ரம்பூட்டான் பழங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்து வருகிறோம். இதனால் விலை அதிகரித்துள்ளது. ரூ.150-க்கும் குறைவாக விற்கப்பட்ட ஒரு கிலோ மங்குஸ்தான் மற்றும் ரம்பூட்டான் பழங்கள் தற்போது ரூ.220-க்கு விற்கப்படுகிறது. பிளம்ஸ் ரூ.120-க்கும், பேரிக்காய் ரூ.80-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ரூ.100-க்கு குறைவாக விற்கப்பட்ட ஆப்பிள் தற்போது ஒரு கிலோ ரூ.180-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நீலகிரியில் மேற்கண்ட பழங்களின் மகசூல் அதிகரித்தால் விலை கணிசமாக குறையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**குறுவை சாகுபடி விவசாயிகளுக்கு விலையில்லா ஜிப்சம் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்**




கொள்ளிடம் வட்டாரத்தில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விலையில்லா ஜிப்சம் வழங்கப்பட உள்ளது என வேளாண்மை உதவி இயக்குனர் பால்ராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- ஊக்கத் தொகை

தமிழக அரசு டெல்டா மாவட்டங்களுக்கு குறுவை சிறப்பு தொகுப்பு உதவி திட்டம் அறிவித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் காவிரி பாசன பகுதிகளில் நிலத்தடி நீரைபயன்படுத்தி அதிகப்பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொண்டு அதிக மகசூல் பெற, நெல் நுண்ணூட்டம் மற்றும் உயிர் உரங்களுக்கு ஆகும் செலவு தொகையை, ஊக்கத் தொகையாக குறுவை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.315 வீதம் அனைத்து விவசாயிகளின் வங்கிக்கணக்கில் செலுத்தப்பட உள்ளது. எனவே கொள்ளிடம் வட்டார குறுவை சாகுபடி விவசாயிகள் அனைவரும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கணக்கு எண் மற்றும் வங்கி

குறியீட்டு எண் குறுவை சாகுபடி பரப்பு போன்ற விவரங்களுடன் சம்மந்தப்பட்ட பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். விலையில்லா ஜிப்சம்

குறுவை சாகுபடி விவசாயிகள் வடிமுனை குழாய் நீரைக்கொண்டு நீர்பாசனம் செய்ய வேண்டிய சூழ்நிலையில் வடிமுனை குழாய் நீரில் உப்புத்தன்மையை குறைக்கவும், கந்தகம் மற்றும் கால்சியம் நுண்ணூட்ட சத்து குறைப்பாட்டினை போக்கவும் குறுவை சாகுபடியாளர்களுக்கு விலையில்லா ஜிப்சம் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. கொள்ளிடம் வட்டாரத்தில் உள்ள கடவாசல், எருக்கூர் மற்றும் கொள்ளிடம் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் 170 டன் ஜிப்சம் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. எனவே விவசாயிகள் அதனை வாங்கி பயன்பெறவேண்டும்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

**குமாரபுரம் அருகே 20 அடி உயரத்திற்கு வளர்ந்த வாழை**



குமாரபுரம் அருகே மேக்காமண்டபம், மாடன்விளையில் வசிப்பவர் கோலப்பதாஸ் (வயது42), விவசாயி. இவர், தன்னுடைய வீட்டு

தோட்டத்தில் வாழை சாகுபடி செய்து வருகிறார். இவருடைய தோட்டத்தில் பயிரிட்ட ஏத்தன் வாழை 20 அடி உயரம் வளர்ந்து குலைபோட்டுள்ளது. இந்தகுலையில் 6 சீப்பு காய்கள் உள்ளன. இந்த அதிசய வாழையை அந்த பகுதி பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்து செல்கிறார்கள்.

**பார்த்தீனிய செடிகளால் விவசாய நிலங்கள் அழியும் அபாயம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கோரிக்கை**



சுல்தான்பேட்டை பகுதிகளில் அடர்ந்து வளர்ந்துள்ள பார்த்தீனிய செடிகளால் விவசாயம் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பார்த்தீனிய செடிகள்

சுல்தான்பேட்டை பகுதியில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. தென்னை விவசாயத்துக்கு அடுத்தபடியாக அங்கு கத்தரி, மிளகாய், வெண்டை, பீட்ரூட் உள்ளிட்ட காய்கறி பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அங்குள்ள விவசாய நிலங்களுக்கு, பார்த்தீனியம் செடிகள் மூலமாக புதிய அபாயம் தோன்றியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு அந்த பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக அங்குள்ள விவசாய நிலங்களில் பார்த்தீனிய செடிகள் அடர்ந்து வளர்ந்துள் ளன. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் இந்த விஷச்செடிகள் விவசாய நிலங்களையும் பாழ்படுத்துபவை ஆகும். தடுப்பு நடவடிக்கை

இந்த செடிகளை அப்படியே விட்டால் மண்ணில் உள்ள உயிர்ச்சத்துகளை உறிஞ்சி அந்த நிலத்தை விவசாயம் செய்ய முடியாத தரிசு நிலமாக்கி விடும். எனவே அவற்றை உடனடியாக அகற்றவும், அவை பரவுவதை தடுக்கவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேபோல் பல்லடம்-பொள்ளாச்சி சாலை, செஞ்சேரிமலை சாலை, காமநாயக்கன்பாளையம் சாலை ஆகிய சாலைகளின் ஓரம் மழை காரணமாக புதர்செடிகள் முளைத்துள்ளன. இவை அங்குள்ள மைல்கல்களை மறைக்கும் வகையில் இருக்கின்றன.

இதனால் அந்த சாலை வழியாக புதிதாக வரும் வாகன ஓட்டிகள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். எனவே அந்த புதர் செடிகளை அகற்ற நெடுஞ்சாலைத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

**மரவள்ளி கிழங்கை, அரசே நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் மலைவாழ் மக்கள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம்**



பச்சமலையில் நடந்த மலைவாழ் மக்கள் ஆலோசனை கூட்டத்தில், கொள்முதல் நிலையம் அமைத்து மரவள்ளி கிழங்கை அரசே நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மரவள்ளி கிழங்கு உப்பிலியபுரத்தை அடுத்துள்ளது பச்சமலை. இங்கு தென்புறநாடு, வண்ணாடு, கோம்பை என 3 ஊராட்சிகள் உள்ளன. இப்பகுதிகளில் உள்ள சுமார் 64 கிராமங்களில் 40 ஆயிரம் ஏக்கருக்கு மேல் ஆண்டு தோறும் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்யப்படும் கிழங்குகள் சேலம், ஆத்தூர், தம்மம்பட்டி பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு சேமியா, சவ்வரசி போன்ற உணவு பொருட்கள் தயாரிக்க விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இதில் தொழிற்சாலையில் ஒரு விலையும், தொழிற்சாலைக்கு உள்ள இடைத்தரகர்களுக்கு ஒரு விலையும், மரவள்ளி கிழங்கை அறுவடை செய்யும் போது பச்சமலையில் உள்ள இடைத்தரகர்களுக்கு ஒரு

விலையும் என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு மிக குறைந்த விலையே கிடைக்கிறது. அரசே கொள்முதல்...

இதுகுறித்து டாப்செங்காட்டுப்பட்டி பச்சமலையில் உள்ள பயணியர் மாளிகையில் வண்ணாடு ராஜேந்திரன், கோம்பை ராஜு, தென்புறநாடு குமாரசாமி, ஆத்திநாடு சதீஷ் ஆகியோர் தலைமையில் மலைவாழ் மக்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில், தமிழக அரசு, மாவட்ட நிர்வாகம் பச்சமலையில் கிழங்கு தொழிற்சாலை அமைக்க வேண்டும். அல்லது கொள்முதல் நிலையம் அமைத்து மரவள்ளிக்கிழங்கை அரசே நேரடியாக கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு பணம் வழங்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தினகரன்

**கருவி மூலம் நிலக்கடலை விதைப்பு செயல்விளக்கம்**

ஜெயங்கொண்டம் : அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் அருகில் உள்ள பெரியகிருஷ்ணாபுரத்தில் நிலக்கடலை விதைப்பை கருவியை கொண்டு விவசாயிகளுக்கு செயல் விளக்கமளிக்கப்பட்டது.ஆண்டிமடம் வட்டாரத்தில் பெரியகிருஷ்ணாபுரம் கிராமத்தில் வசித்து வருபவர் விவசாயி அந்தோணிஜோசப். இவரது நிலத்தில் கருவி மூலம் நிலக்கடலை விதைப்பு செயல்விளக்கம் நடத்தபட்டது. நிகழ்ச்சியில் வேளாண் உதவி இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண் அலுவலர் சுகந்தி,துணை வேளாண் அலுவலர் அப்பாவு, வேளாண் உதவி அலுவலர் அந்தோணிராஜ், ராஜதுரை மற்றும் கிராம பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர். நிலக்கடலை எப்படி விதைக்கப்படுகிறது என்பது பற்றி

செயல் விளக்கமளிக்கப்பட்டது. இதுகுறித்து வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறுகையில் ''தமிழகஅரசு இரண்டாவது பசுமைப்புரட்சி மூலம் ஆள் பற்றாக்குறையை போக்க இயந்திரமாக்கல் என்ற கொள்கையை தீவிரமாக பின்பற்றி வருகிறது.

ஆரம்பத்தில் இவற்றை எதிர்த்த போதும் இப்போது கால சூழலுக்கேற்ப இயந்திரமாக்கலை ஏற்றுக்கொண்டனர். குறைந்த ஆட்களை வைத்து சுலபமான முறையில் விதைக்கலாம். ஆகவே ஆள் செலவு குறைகின்றது. சீரான இடைவெளியில் விதை விதைக்கப்படுகின்றது. ஆகவே பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுகிறது. ஒருநாளில் 4ஏக்கர் விதைக்கலாம். பின்செய் நேர்த்தி பணிகளான களையெடுத்தல், பூச்சி நோய்தடுப்பு, மருந்து தெளித்தல் ஆகியவற்றை எளிதாக செய்யலாம். சாகுபடி செலவு மிக குறைவு நிகர வருமானம் அதிகமாக கிடைக்கும். இதன் மூலம் தனிநபர் வருமானம் பெருகும். இக்கருவி காலப்போக்கில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றார். தொடர்ந்து விவசாயி அந்தோணிஜோசப் கூறுகையில் தற்போது நிலக்கடலை சாகுபடியில் நாங்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ள நிலையில் ஏர் உழுது விதைக்க ஏர் மாடுகள் கிடைப்பதில்லை. அப்படியேகிடைத்தாலும் ஒரு ஏக்கருக்கு ரூ.2500 முதல் 3000 வரை கூலி கேட்கின்றனர். வேறு இடத்தில் ஏர் உழுதுவிட்டுவரும் வரை மண்ணில் ஈரப்பதம் போய்விடுகிறது. இந்த நிலையில் இப்பகுதியில் முதல் முறையாக நிலக்கடலை விதைப்பு கருவி மூலம் நிலத்தில் விதைக்க துவங்கி உள்ளேன். ஏர் கொண்டு உழுது பயிரிட்டால் 1 ஏக்கருக்குசுமார் ரூ.2300 செலவாகிறது. ஆனால் இந்த விதைப்பு கருவியை கொண்டு பயன்படுத்தும்போது 1 ஏக்கருக்கு ரூ.1000 மட்டுமே செலவாகிறது என்றார். செயல்விளக்கத்தின்போது ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டுபார்வையிட்டனர்.

**இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்: ஜூலையில் பருவ மழை குறையும்**

புதுடெல்லி: வடமேற்கு பகுதியை விட மற்ற இடங்களில் எதிர்பார்த்ததை விட ஜூலை மாதம் பருவ மழை குறையும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜூன் 1ம் தேதி முதல் ஜூலை 8ம் ேதேதி வரை இந்தியா முழுவதிலும் சராசரியைவிட 4 சதவீதம் குறைவாகவே மழை பெய்துள்ளது. இந்தியாவின் மத்திய பகுதியில் ஜூன் மாதம் நல்ல மழை பெய்துள்ளது. இந்தியாவின் தென் பகுதி, கிழக்கு மற்றும் வடமேற்கு பகுதியில் சராசரியாக பெய்யும் மழையைவிட 7 முதல் 8 சதவீதம் வரை குறைவாகவே பெய்துள்ளது. பொதுவாக இந்தியாவின் வடமேற்கு பகுதியை தவிர நாட்டின் ஒட்டு மொத்த பகுதியிலும் மழையின் அளவு குறைவாகவே உள்ளது. இதில் கடந்த சில நாட்களாக மழை மிகவும் குறைந்துள்ளது.

ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் வழக்கத்தை விட 8 முதல் 10 சதவீதம் வரை குறைவாக பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் தனியார் வானிலை ஆய்வு மையம் ஒன்று, ஜூலை மாதம் வழக்கத்தை விட 4 சதவீதம் கூடுதலாக மழை பெய்யும் எனவும், ஆகஸ்ட் மாதம் வழக்கமான அளவிலும், செப்டம்பர் மாதம் வழக்கத்தை விட 4 சதவீதம் குறைவாக மழை பெய்யும் எனவும் தெரிவித்துள்ளது. இந்தியாவில் பெய்யும் இரண்டு பருவமழையில் ஒன்றான தென்மேற்கு பருவமழை காலத்தில், மேற்கு கடற்கரை மற்றும் வடகிழக்கு இந்தியாவில் நல்ல மழை பெய்யும்.

இந்த ஆண்டு பருவ மழை கேரளாவில் வழக்கத்தை விட 30 சதவீதம் குறைவாகவும், கர்நாடக கடலோரப் பகுதிகளில் 32 சதவீதம் வரை

குறைவாகவும், கொங்கண் மற்றும் கோவாவில் 15 சதவீதம் வரையிலும் குறைவான அளவில் மழை பெய்துள்ளதாக அந்த தனியார் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 84.58 அடியானது**

மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால், கர்நாடக மாநிலத்திலுள்ள கபினி அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்துள்ளது. நேற்று அணைக்கு வினாடிக்கு 3,581 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. திறப்பை விட, நீர்வரத்து அதிகளவில் உள்ளதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 84.39 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 84.58 அடியாக உயர்ந்தது. நீர் இருப்பு 46.67 டிஎம்சி.

**விதை பண்ணையில் கலெக்டர் ஆய்வு**

திருப்பூர், : திருப்பூர் பொங்கலூர் தேவனம்பாளையம் பகுதியில் அரசு விதை பண்ணை செயல்பட்டு வருகிறது. இதில் தற்போது இரண்டரை ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் 10 நாட்களில் அறுவடை செய்யப்படும் நிலையில் உள்ள இந்த பண்ணையை கலெக்டர் கோவிந்தராஜ் ஆய்வுசெய்தார். இதைத்தொடர்ந்து 3 ஏக்கர் பரப்பளவில் அங்கு பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராக உள்ள பசுந்தாள் பயிரையும் பார்வையிட்டார்.

மேலும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் நர்சரி அமைத்து மரக்கன்றுபராமரித்து அனைத்து வட்டாரங்களுக்கும் வினியோகிக்கும் வகையில் ரூ.5 லட்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த

பகுதியில் ரூ.26 லட்சத்து 45 ஆயிரம் மதிப்பில் ரோடு அமைக்கும் பணிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். மழைக்காலங்களில் வயலில் உடைப்பு ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க கலெக்டர் உத்தரவிட்டார். தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் சமயங்களில் பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் வகையில் கட்டப்பட்டுள்ள பண்ணைக்குட்டைகளை பார்வையிட்டார்.இந்த ஆய்வின் போது திருப்பூர் ஆர்.டி.ஓ.முருகேசன், வேளாண்மை இணை இயக்குனர் கனகசபை, துணை இயக்குனர் மகேந்திரன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**ஆடிப்பட்ட காய்கறி தொழில் நுட்ப விளக்கம்**

கரூர், : தாந்தோணி வட்டாரம் உப்பிடமங்கலம் கருப்பூர் கிராமத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் திட்டப்பயனாளிகள் தேர்வு விழா நடைபெற்றது.

தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் தலைமை வகித்தார், உதவி அலுவலர் கலயாணசுந்தரம் வரவேற்றார். அலுவலர் பேபி, ஆடிப்பட்ட காய்கறி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். திட்டங்கள், மானியங்கள் குறித்து உதவி இயக்குனர் விளக்கினார். உதவிஅலுவலர் பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

கிருஷ்ணராயபுரம் வட்டாரம் பஞ்சப்பட்டி கிராமத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் திட்டப் பயனாளிகள் தேர்வு விழா நடைபெற்றது. வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் (பொ) சொர்ணமாணிக்கம் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் நசீர் வரவேற்றார். தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மானியத்திட்டங்கள், மானிய உதவிகளை பெறும் வழிமுறைகளையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். பஞ்சப்பட்டி பகுதிமுன்னோடி

விவசாயிகள் ஏற்பாடுகளை செய்திருந்தனர். உதவி வேளாண் அலுவலர் சந்திரசேகரன் நன்றி கூறினார்.

**திருவையாறில் தரமான விதை உற்பத்தி பயிற்சி முகாம்**

திருவையாறு, : திருவையாறு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் சார்பில் அட்மா திட்டம் 20142015 திட்டத்தின்கீழ் தரமான விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சி முகாமை திருவையாறு வேளாண்மை உதவி இயக்குநர் மீனாட்சிசுந்தரம் துவக்கி வைத்தார். தஞ்சை வேளாண்மை உதவி இயக்குநர் (விதை சான்று) மணிமாறன், வேளாண்மை அலுவலர் (விதைச்சான்று) மோகன், வேளாண்மை அலுவலர் (விதை சான்று) லதா ஆகியோர் செயல்விளக்கம் அளித்தனர். முகாமில் விதை பண்ணை விவசாயிகள் மற்றும் விதை பண்ணை அமைக்கவுள்ள விவசாயிகள் 25 பேர் பங்கேற்றனர். முகாம் ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் மாதாலட்சுமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பிறைசூடி செய்தனர். உதவி விதை அலுவலர் பெரியராஜ் நன்றி கூறினார்.

**ஈரோடு சந்தையில் 90% மாடு விற்பனை**

ஈரோடு, : ஈரோடு மாட்டு சந்தைக்கு வாரந்தோறும் ஏராளமான மாடுகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. நேற்று 450 பசு மாடுகளும், 350 எருமை மாடுகளும் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. கறவை மாடுகளை வாங்கி செல்ல ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேசம், கோவாவில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந்தனர். இதனால், கறவை மாடு, எருமை களின் விற்பனை அமோகமாக காணப்பட்டது. நேற்று மட்டும் 90 சதவீதம் மாடுகள் விற்பனை ஆகியது. இதுகுறித்து மாட்டுச்சந்தை நிர்வாகத்தினர் கூறுகையில், 'மாட்டுச்சந்தைக்கு சமீபகாலமாக அதிகளவில் கறவை மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

பாலுக்கு போதிய விலை கிடைக்காதது, கறவை மாடுகளின் தேவை அதிகரிப்பு, வெளி மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்து வருவதால் தாராளமாக கிடைக்கும் பசுந்தீவனங்கள் போன்ற காரணங்களால் அதிகளவில் கறவை மாடுகளின் விற்பனை நடக்கிறது. சிந்து, செவலை, எச்.எப்., எச்.எப் கிராஸ், ஜெர்சி போன்ற மாடுகளின் ரகங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இந்த ரக மாடுகள் அனைத்து சீதோஷ்ண நிலையையும் தாங்கி வளரும் என்பதால் இவற்றிற்கு கிராக்கி குறையாமல் உள்ளது'.என்றனர்.